**உக்குவளை பிரதேச சபை**
**மாத்தளை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை ஆகியன 2020 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உக்குவளை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாசிகசாலைப் புத்தகங்கள் நன்கொடை ரூபா.99,404 மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 975,333 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |
| (இ) | சபைக் காரியாலயக் கட்டிடத்தின் மேல் மாடி நிர்மாணிப்புடன் தொடர்பான கடன்கொடுத்தோர் ரூபா. 567,660 கூடுதலாகவும் பொதுச் சந்தை அபிவிருத்தி நிர்மாணப் பணிகளுடன் தொடர்பான கடன்கொடுத்தோர் ரூபா. 379,665 குறைவாகவும் கணக்கிடப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | செயற்படுத்தப்படாத ரூபா. 303,667 பெறுமதியான 8 அபிவிருத்தி ஆலோசனைகளின் மொத்தம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |
| (உ) | தேர்தல் செலவினங்கள் கடன்கொடுத்தோர் ரூபா. 127,548 கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |
| (ஊ) | 4 நிலையான வைப்புக்கள் தொடர்பான ஒரு வருடத்திற்கான வட்டி ரூபா. 727,692 குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |
| (எ) | 2017 இல் தீர்க்கப்பட்ட ரூபா. 26,274 ஆன ஊழியர் கடன் நிலுவை கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மொத்தம் ரூபா 144,486,232 உள்ளடங்கிய 6 கணக்குகளுக்குரிய துணை ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்க இடையே ரூபா 10,080,555 பொருந்தாமல் காணப்பட்டது. | கணக்கு மீதிகள் சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன் |

### 1.3.3 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய கணக்குகள் | | |
| | 1 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக காணப்பட்ட பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 336,596 ஆகும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (ஆ) | செலுத்த வேண்டிய கணக்குகள் | | |
| | 5 வருடங்களுக்கும் மேலாக செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,944,846 ஆகும். | கணக்கு மீதிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொது நீர் தூண் / குழாய்க் கிணறு வைப்புக்கள் ரூபா 220,916 மற்றும் பொது வைப்புக்கள் ரூபா 772,949 ஐ வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

### 1.3.4 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 51,887,109 பெறுமதியான 02 கணக்குகளுக்குரிய தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அட்டவணைகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், நிதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 மார்ச் 17 திகதிய 2016/3 இலக்க உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றுநிரூபத்தின் 10ஆம் பிரிவு. | சபைக்குச் சொந்தமான 14 கடைகளை குத்தகைக்கு பெற்றிருந்தவர்கள் உப வாடகை கொடுத்திருந்தனர். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைவாக செயற்படல் வேண்டும். | உப வாடகைக்கு விடல் மற்றும் வாடகை அதிகாரத்தினை வழங்கிய சந்தர்ப்பங்களை ஆராய்ந்து சரி செய்வேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,910,046 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 36,726,210 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 804,366 | 802,921 | 657,685 | 703,459 | 812,344 | 801,677 | 887,287 | 529,138 |
| (ii) | வாடகை | 750,000 | 750,000 | 705,800 | - | 750,000 | 750,000 | 771,845 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 3,832,000 | 3,315,965 | 2,391,380 | 48,967 | 3,102,735 | 3,066,876 | 2,024,139 | 53,555 |
| (iv) | ஏனைய வருமானம் | 36,512,000 | 39,822,786 | 41,555,838 | 35,611,475 | 35,409,000 | 40,537,212 | 25,240,988 | 25,583,799 |
| | மொத்தம் | 41,898,366 | 44,691,672 | 45,310,703 | 36,363,901 | 40,074,079 | 45,155,765 | 28,924,259 | 26,166,492 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 வருடங்களுக்கு மேலாக காணப்பட்டு வருகின்ற 21 அரச உடைமைகளுடன் தொடர்பான நிலுவை வீத வரி ரூபா. 95,366 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். | வீத வரியைச் செலுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் ரூபா 1,153,397 செலவில் மேற்கொள்ளப்பட்டிருந்த 6258 வீதவரி அலகுகளுக்கான வீதவரி விலைமதிப்பீடு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டண அறவீட்டின் போது புதிய விலைமதிப்பீட்டு அறிக்கை அடிப்படையாகக் கொள்ளப்படல் வேண்டும். | 2020ஆம் ஆண்டிலிருந்து புதிய விலைமதிப்பீட்டின் படி வீதவரியை அறவிட நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த கடை வாடகை ரூபா. 48,967 ஆகவிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 2016 மார்ச் 17ஆம் திகதிய 2016/3 இலக்க மத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் 5.1 பிரிவின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒரு முறை 45 கடைகளினதும் வாடகை மீள் பரிசீலனை செய்யப்பட்டிருக்கவில்லை. | ஓப்பந்தங்கள் நாளதுவரையாக்கப் படல் வேண்டும். | மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டு புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.4 நீர் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகவிருந்த நீர்க் கட்டண மீதி ரூபா. 1,780,189 ஆகவிருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நடமாடும் சேவை நடாத்துதல் மற்றும் இணைப்பைத் துண்டித்தலூடாக நிலுவை நீர்க் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | நீர் வருமானம் தொடர்பாக செயற்படுத்தப்படுகின்ற கணனி மென்பொருளினூடாக நிலுவை வருமானம் அறவிடல் தொடர்பான தகவல்களைப் பெற முடியவில்லை.. | கணினி மென்பொருள்களை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | புதிய மென்பொருளொன்றினைப் பெற்றுத் தருவதற்கு உள்ளூராட்சித் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்த போதும், இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மத்திய மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா.3,291,639 ஆகவும் முத்திரைக் கட்டணம் ரூபா.25,139,647 ஆகவும் இருந்தது. | பெற வேண்டிய வருமானங்கள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையினை எதிர்காலத்தில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### (அ) திட்டங்களை செயற்படுத்துவதில் உள்ள தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபை நிதியின் மூலம் செயற்படுத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்த மதிப்பீடொன்றின் பெறுமதி ரூபா.2,334,100 ஆகவிருந்த 15 திட்டங்களுக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்த போதும், செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | முறையான கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், ஒப்பந்த மீறல்கள் குறித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2020 ஜூன் மாதம் ஆகும் பொழுது இவ் அபிவிருத்தித் திட்டங்கள் அனைத்தையும் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நாளாந்தம் சேரும் 3 டொன் கழிவுகளில், 1 டொன் உக்காத கழிவுகள் சபை எல்லையினுள் புதைக்கப்பட்டு மண் நிரப்பப்படும் முறை பின்பற்றப்பட்டு வந்துள்ளதுடன், 1 டொன் உக்கும் கழிவுகள் கொம்போஸ்ட் உரத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. கழிவு முகாமைத்துவத் திட்டத்திற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கழிவு அகற்றலின் போது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அறிவுறுத்தல்களுக் கமைவாக செயற்படுவதற்கும் அசேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். | சேகரிக்கப்படுகின்ற கழிவு சுமார் ஒரு மெட்ரிக் டொன் அசேதனப் பசளை உற்பத்தி செய்யப்படுவதுடன், பாதையோரங்களில் முறையற்ற விதத்தில் கொட்டப்படுகின்ற சுமார் ஒரு மெட்ரிக் டொன் கழிவு புதைக்கப்பட்டு மண் இடப்படுகின்ற அதேவேளை சுற்றாடல் அதிகார சபையின் அறிவுறுத்தல்களுக்கமைவாக கழிவுத் தொட்டி தயாரிக்கப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரலுக்கமைவாக இலக்குகளை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் முறையாக கண்டறியப்பட்டு திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | திட்டமிட்ட செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்காக இலக்கு வைக்கப்பட்ட ஆண்டாகிய 2030ஆம் வருடத்தினுள் செயற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீண்டெழும் வருமானம் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாது, ரூபா. 34,937,853 நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மீண்டெழும் வருமானம் பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும். | நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள பணம் எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | கடந்த 3 வருடங்களில் கட்டட நிர்மாணிப்புகளுக்கான 1352 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்ததுடன் அவற்றில் 968 விண்ணப்பங்களுக்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. 54 சந்தர்ப்பங்களில் இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்த போதும், அனுமதிக்கப்பட்ட 384 விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னூட்டல் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னூட்டல் செய்யப்பட வேண்டும். | அனுமதி வழங்கப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பின்னூட்டல் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புல வருடங்களாகத் தீர்க்கப்படாதுள்ள பெற வேண்டிய ஊழியர் கடன் வட்டி ரூபா.560,776 மற்றும் மேலதிக ஊழியர் கடன் பெறுவனவு ரூபா.3,432 காணப்பட்டது. | ஊழியர் கடன் வட்டி அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஊழியர் கடன் அறவிடல் தொடர்பாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 03 ஊழியர்களிடமிருந்து பல வருடங்களுக்கு முன்பிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா.273,692 கடன் மீதி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஊழியர்களுக்கு கடனை செலுத்துமாறு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்தப்படாத விடத்து எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்பாடற்ற/ குறை பயன்பாடுடைய சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சின் மூலம் வழங்கப்பட்ட ரூபா. 5,000,000 பெறுமதியான மோட்டர் கிரேடர் இயந்திரம் பயன்பாடற்றுக் காணப்பட்டது. | தேவையுள்ள வேறொரு அரச நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மோட்டர் கிரேடர் இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்துவதற்கான தேவை இப்பிரதேசத்தில் காணப்படாததன் காரணமாக பயன்படுத்த முடியாதிருந்துள்ளது. |

**3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுக் கூட்டங்களோ அல்லது குழுக் கூட்டங்களோ அல்லது வேறு வைபவங்களோ கூட்டங்களோ நடாத்தப்படாத பொழுதும் உணவுக்காக ரூபா.36,460 செலுத்தப்பட்டிருந்தது. | முறையற்ற விதத்தில் பணம் செலவிடக் கூடாது. | அவதானிப்பினை ஏற்றுக்கொள்கிறேன். திணைக்கள ரீதியாக முறையான பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முறையற்ற விலைமனுக் கோரல் அடிப்படையில் ரூபா.373,600 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 2 நடமாடும் விற்பனை கூடங்கள் பயன்படுத்தப்படாமல் இருந்தன. | முறையான விலைமனுக் கோரல் முறை பின்பற்றப்படல் வேண்டும். | கழிவு அகற்றும் இடத்திற்கு அருகில் குடியிருக்கும் ஒரு ஒப்பந்தக்காரருக்கு நிர்மாணப் பணியினை வழங்குவதற்கான தீர்மாணம் மேற்கொள்ளப்பட்ட போது சிக்கலான ஒரு நிலை உருவானதன் காரணமாக ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் விலைமனுக் கோருவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

**3.6 பெறுகைகள்**

**-----------------**

**விநியோகம் மற்றும் சேவைகள்**

**-------------------------------------------**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கிராமசக்தி கிராமங்களின் அபிவிருத்தி திட்டங்களை செயற்படுத்துவதற்காக 12 அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூபா.30,000,000 நிதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| (அ) 1988 பிரதேச சபை விதிமுறைத் தொடரின் 178ஆவது விதிமுறையின் (2)(2)(ஊ) இற்கமைய விலைமனு வழங்குவதற்கு போதிய காலம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சட்ட விதிமுறைகளுக்கமைவாக செயற்படல் மற்றும் வினைத்திறனான முறையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 2019 செப்டம்பர் 15ஆம் திகதி நிதி கிடைத்தல், கால தாமதமாகி மதிப்பீட்டினை அனுமதித்தல் மற்றும் பரிந்துரைத்தல் செயற்பாடு தாமதமடைதல் ஆகிய காரணங்களால் விலைமனுதாரர்களுக்கு போதிய கால அவகாசம் வழங்க முடியாது போனது. |
| (ஆ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 பிரிவின் பிரகாரம் செயற்படாது ரூபா. 17,898,705 பெறுமதியான 06 அபிவிருத்தி திட்டங்கள் திட்டமிட்ட அடிப்படையில் ஒவ்வொரு திட்டத்திற்காகவும் ஒரு விலை வழங்கப்பட்ட நிலையில் திட்டங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. | சுட்டங்கள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டிக் கோவையின் அடிப்படையில் வெளிப்படையாக செயற்படல் வேண்டம். | ஒப்பந்தக்காரர்கள் முன்வராத சந்தர்ப்பத்தில் விண்ணப்பித்த ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்மாணப் பணிகள் கையளிக்கப்பட்டமையினைக் குறிப்பிடுகிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கிராமசக்தி கிராமங்களின் 12 அபிவிருத்தி திட்டங்களை செயற் படுத்துவதற்கான அனுமதி கிடைத்திருந்த போதும், பெறுகை நடவடிக்கைகள் வினைத்திறனான முறையில் இடம் பெறாததன் காரணமாக 03 திட்டங்களுடன் தொடர்பான ரூபா. 10,448,436 மீண்டும் ஜனாதிபதி செயலகத்திற்கு திருப்பி அனுப்ப வேண்டியேற்பட்டிருந்தது. | வினைத்திறனான முறையிலும் அவதானத்துடனும் செயற்படல் வேண்டும். | இரண்டு திட்டங்களுக்கான விலைமனு கிடைக்கப் பெறாமை, மழையுடன் கூடிய காலநிலை காணப்பட்டமை மற்றும் நிறைவடைந்த வேலைகளுக்கான நிதி கிடைக்காமை ஆகிய காரணங்களால் திட்டங்களை ஆரம்பிக்க முடியாதிருந்தது. |